ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2288/14 - 2022 ජූලි මස 12 වැනි අඟහරුවාදා - 2022.07.12

*2288/14 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ஹோமாகம பிரதேச சபை அதிகார எல்லையினை உள்ளடக்கிய அபிவிருத்தி திட்டத்திற்கான அங்கீகாரம்**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தப்பட்ட) பிரிவு 8F, இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்ட பரிசீலனைக்கு அமைய, ஹோமாகம பிரதேச சபை அதிகார எல்லையினை உள்ளடக்கிய அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதியினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.)
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 வது மாடிகள்,
"சுஹுருபாய",
சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை.
2022, யூலை 04.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**ஹோமாகம பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி தொடர்பான அறிவித்தல்**

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஹோமாகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டத்தினை, 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆம் திகதி நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், குறித்த 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை (திருத்தப்பட்ட) சட்டப் பிரிவு 8(F) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது என அதன் சட்டத்தின் பிரிவு, 8(G) இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பிரசன்ன ரணதுங்க** *(பா. உ.)*
*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,*
*17 மற்றும் 18 வதுமாடிகள்,*
*"சுஹுருபாய",*
*சுபுதிபுர வீதி,*
*பத்தரமுல்லை.*
*2022, யூலை 12.*

---

**ஹோமாகம பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகரம்**

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 8(A) ஆம் பிரிவின் அதிகாரங்களுக்கு அமைய ஹோமாகம பிரதேச சபையின் அபிவிருத்தி பிரதேசத்தினை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தினை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணதுங்க அவர்களினால் குறித்த சட்டத்தின் 8(F) ஆம் பிரிவிலிருந்து அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு இணங்க 2022, யூலை மாதம் 04 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டது என பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

*மேஜர் ஜெனரல் (ஓய்வு)* **உதய நானாயக்கார,**
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகாரசபை.*

*நகர அபிவிருத்தி அதிகாரசபை,*
*2022, யூலை 12.*

EOG *07 - 0083*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*